1981 பிப்ரவரி 26]

முடியாத காரணங்களுக்காக வாய்தா கேட்கவில்லையென்றால், வாய்தா கொடுக்கக் கூடாது என்று தற்போது நடைமுறையில் கடைப்பிடித்து வருகி றார்கள்.

திரு. செ. முத்துசாமி : நீதிமன்றங்களில் காலதாமதம் ஏற்படுவதைப் போல நிர்வாகங்களிலும் காலதாமதம் ஏற்படக் கூடிய சூழ்நிலை இருப்பதால், நிர்வாகத்தில் ஒரு முறையீடு மனு வருமானால், அதை இத்தனை காலத்திற் குள் முடித்தாக வேண்டும் என்று சொல்லக்கூடிய அளவிற்கு ஒரு சட்டத்தை சட்ட அமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அரசி னுடைய குவாசி-ஜுடிஷியல் ஃபங்ஷனைப் பற்றிக் குறிப்பிடுகிறார் என்று நினைக்கிறேன். எங்கெங்கு, எந்தெந்த இடங்களில் காலதாமதம் இருக்கிற தென்று தெரிவித்தால், அது குறித்து அரசு பரிசீலனை செய்யும்.

தீர்ப்பளிக்கப்படாத—நீதிப் பேராணை மனுக்கள்.

* 81 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சென்னை உயர்நீதிமன்றத்தில் 1978 டிசம்பருக்கு முன் பதிவு செய்யப் பட்ட, நீதிப்பேராணை (Writ petitions) மனுக்களில் தீர்ப்பளிக்கப்படா மல் எத்தனை இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : சென்னை உயர்நீதி மன்றத்தில் 1978 டிசம்பருக்கு முன்வரை பதிவு செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்படாமல் இருக்கும் நீதிப்பேராணை மனுக்களின் எண்ணிக்கை 1929 ஆகும்.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, ஒருவருடைய தனிப்பட்ட உரிமை பாதிக்கப்பட்டிருப்பதால், தன்னுடைய உரிமைப் பிரச்சினையைப் பற்றி நீதி வேண்டி ரிட் மனுவைப் போடுகிறார். அப்படி உரிமைக்காக நீதி வேண்டி வருகிறபோது, மூன்றாண்டுகளுக்கு மேலாக சுமார் இரண்டாயிரம் வழக்குகள் தீர்ப்பு அளிக்கப்படாமல் இருந்தால், உண்மையில் அவர்களுடைய உரிமையை மறுப்பதாக ஆகாதா ? ஆகவே அரசு இத்தகைய காலதாமதத்தைத் தடுக்க என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : நான் ஏற்கெனவே பதில் சொன் னதைப் போலவே, அரசுக்கும் இதற்கும் நேரிடைத் தொடர்பு இல்லை. உயர்நீதி மன்றத்திடம் அரசு இது குறித்து கேட்கலாம். உயர்நீதி மன்றத்தி னிடம் இது குறித்து கேட்கப்பட்டிருக்கிறது. 1975 ஆம் ஆண்டைச் சேர்ந்த

3 வழக்குகளும், 1976 ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட 49 ரிட் மனுக்களும், 1977 ஆம் ஆண்டிலே தாக்கல் செய்யப்பட்ட 577 ரிட் மனுக்களும், 1978 இறுதிவரை தாக்கல் செய்யப்பட்ட 1,554 ரிட் மனுக்களும் நிலுவையில் இருக்கின்றன. குறிப்பாக குறிப்பிட்ட சட்டப் பிரச்சினையைக் குறித்து பல ரிட் மனுக்கள் ஒரே தடவையில் தாக்கல் செய்யப்படுகிறபோது, அத்தனையையும் டிவிஷன் பெஞ்சுக்கு அனுப்பி துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். அந்த அடிப்படையிலே இந்தப் பிரச்சினை தீரும் என்று உயர்நீதிமன்றம் தெரிவித்திருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்பு பதில் சொல்லும்போது, "மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது" என்று சொல்லியிருக்கிறார்கள். என்ன தெரிவிக்கப்பட்டிருக்கிறது? எத்தனை புதிய நீதிபதிகளை நியமிக்க வேண்டுமென்று நம்முடைய அரசு மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : உயர்நீதி மன்றத்திற்கு இன்னும் அதிகமான நீதிபதிகள் தேவை என்ற உயர்நீதி மன்றத்தின் கோரிக்கையை மாநில அரசு மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறது.

திரு. ம. சங்கரலிங்கம் : ரிட் மனுக்களை விரைவாகத் தீர்க்க கூடுதல் நீதிபதிகளைப் போட வேண்டுமென்று இந்த அரசின் உதவியை நாடி உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியிடமிருந்து கோரிக்கை ஏதாவது வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ரிட் மனுக்களை துரிதப்படுத்தி அவற்றை பரிசீலிக்க அதிகப்படியான நீதிபதிகள் வேண்டுமென்ற கோரிக்கை தலைமை நீதிபதியிடமிருந்து அரசுக்கு வரவில்லை.

திரு. க. இராமமூர்த்தி : ஏறத்தாழ இரண்டாயிரம் ரிட் மனுக்கள், 1978 ஆம் ஆண்டுக்கு முன் பதிவு செய்யப்பட்டு, இன்னும் தீர்க்கப்படாமல் இருக்கின்றன என்றால், அதற்குக் காரணம் நீதிபதிகள் பற்றாக்குறை என்பது மட்டுமா அல்லது உயர்நீதி மன்றத்தினுடைய நிர்வாகத்தில் சீரமைப்பு தேவைப்படுகிறது என்பதா? உயர்நீதி மன்றத்தினுடைய நிர்வாகத்தில் மாநில சீரமைப்பு ஏதாவது செய்ய வேண்டுமென்ற கட்டாயம் இருக்கிறது என்று அரசு உணர்ந்திருந்தால், அதை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறதா?

1981 பிப்ரவரி 26]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : நீதிபதிகள் தேவை மட்டுமின்றி நிர்வாகத்திலே சில மாற்றங்களை நடைமுறைப்படுத்தினால், வழக்குகளைத் தீர்ப்பதில் காலதாமதம் இருக்காது என்பதை அரசு உணர்ந்து இதுகுறித்து உயர்நீதிமன்றத்திற்குத் தெரிவித்திருக்கிறது. உயர்நீதிமன்றம் அவற்றை ஆய்ந்து நடைமுறைப்படுத்த ஆவன செய்து வருகிறது.

Prisoners Reform Measures.

* 82 *Q.*—THIRU P. R. THOMAS : (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Co-operation and Law be pleased to state—

(*a*) whether there is any co-ordination between the work of the Discharged Prisoners Aid Society and the prisoners reform measures taken by the Jail Officials and the Probation Officers ;

(*b*) if so, whether there is any proposal to appoint a Committee to suggest better co-ordination ; and

(*c*) the stage at which the matter now stands ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) கேள்வி எழவில்லை.

தென்காசி முன்சீப் நீதிமன்றம்.

* 83 வினா.—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசியிலுள்ள முன்சீப் நீதிமன்றத்தில், 1980, ஜூன் முதல் 23—9—1980 வரை, முன்சீப் நியமனம் செய்யப்படாததால், அந்நீதி மன்றம் செயல்படவில்லை என்பது அரசின் கவனத்துக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

(உ) அந்நீதிமன்றத்தில் 23—9—1980 வரை தீர்ப்பளிக்கப்படாமலிருக்கும் வழக்குகள் எத்தனை ?